# SWOAD

## Social Welfare organization Ampara District

அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு

# ஆண்டறிக்கை - 2019




SWOAD

Sagama Road, Akkaraipattu, Sri Lanka
Tel:067-2277276, 0772242265
E-mail: swoad@sltnet.lk
Web: swoad.lk
Face book: Swoad New Akkaraipattu.

## நிறுவனம் பற்றிய அறிமுகம்.

அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பானது (SWOAD), அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டு நலிவுற்ற நிலையில் வாழும் மக்களின் தேவைகளை நிறைவு செய்தலை இலக்காகக் கொண்டும், சிறந்த முறையிலான சேவைகளையும் சம வாய்ப்புக்களையும் வழிமுறையாகக் கொண்டும் 1995ம் ஆண்டு திரு.ச.செந்துராஜா அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டு அவரின் ஆலோசனை, வழிகாட்டலுடன் செயற்பட்டு வருகின்ற ஓர் அரச சார்பற்ற அமைப்பாகும்.

இவ்வமைப்பானது அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 53 கிராமக் கிளைகளில் மூவின மக்களினையும் உள்ளிணைத்து செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

செயற்பாட்டு வழிமூலங்களாக 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 6 பிரதேச காரியாலயங்களையும், 53 கிராமக் கிளை அலுவலகங்களையும், அக்கரைப்பற்றில் தலைமைக் காரியாலயத்தினையும் கொண்டு, 4873 அங்கத்தவர்களையும், 61 பணியாளர்களையும் இணைத்த வகையில் **ஸ்தாபகர் திரு.சன்முகம் செந்துராசா** அவர்களின் வழிகாட்டலின் கீழ் தொடர்ந்தும் கண்காணித்து வழிப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது.

## செயற்பாட்டு பிரதேசமும், அங்கத்தவர் எண்ணிக்கையும்.

| பிரதேசம் | கிராமங்களின் எ-கை | மொத்த அங் எ-கை. | குழுக்களின் எ-கை |
|---|---|---|---|
| பொத்துவில் | 09 | 621 | 45 |
| திருக்கோவில் | 16 | 1718 | 78 |
| காரைதீவு | 05 | 518 | 22 |
| கல்முனை | 08 | 664 | 45 |
| சம்மாந்துறை | 06 | 665 | 42 |
| நாவிதன்வெளி | 09 | 687 | 56 |
| | | | |
| **மொத்தம்** | **53** | **4873** | **288** |

# வாழ்வாதாரத் திட்டம்.

மக்கள் சுய தொழிலில் ஈடுபடுவதன் மூலம் வருமானத்தினை அதிகரித்து அவர்களை சுயமாகச் செயற்பட வைப்பதன் ஊடாக தன்னிறைவான மக்கள் சமூகத்தினை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு சுவாட் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி, திருக்கோவில், பொத்துவில் ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட **632** பயனாளிகளிக்கு **77,692,778.00** ரூபாய் நிதியானது சேமிப்புக் கடன் திட்டத்தின் கீழ் வாழ்வாதார தொழில்களை மேற்கொள்வதற்கு கடனாக வழங்கப்பட்டுள்ளன.

| Division | No.of.Beneficiary | Amount |
|---|---|---|
| Pottuvil | 95 | 9,514,269.00 |
| Thirukkovil | 111 | 10,110,525.00 |
| Karaithivu | 117 | 12,598,589.00 |
| Kalmunai | 85 | 14,468,000.00 |
| Sammanthurai | 111 | 16,758,220.00 |
| Navithanveli | 101 | 11,144,175.00 |
| Alayadivembu | 12 | 3,099,000.00 |
| **Total** | **632** | **77,692,778.00** |






## மரணாதாரத் திட்டம்.

அரசாங்க உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களை மையமாகக் கொண்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தில் மாதாந்தம் 5.00 ரூபாய் வீதம் வருடத்திற்கு 60.00 ரூபாய் செலுத்தும் அங்கத்தவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அங்கத்துவ குடும்பம் ஒன்றிக்கு மரணாதார உதவுதொகையாக முதல் தடவை 3000.00 ரூபாவும், இரண்டாம் மரணத்திற்கு 2000.00 ரூபாயுமாக 5000.00 ரூபாய் இத்திட்டத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் இவ்வருடம் 57 அங்கத்துவகுடும்பங்களுக்கு 155,000 ரூபாய் மரணாதார உதவு தொகையாக வழங்கப்பட்டுள்ளதுடன், 1975 அங்கத்துவ குடும்பங்களிடம் 147,375.00 ரூபாய் மரணாதார நிதியாகவும் அறவீடு செய்யப்பட்டுள்ளது.

| Division | No.of.Beneficiary (Death Subscription) | Amount | No.of.Beneficiary (Death Donation) | Amount |
|---|---|---|---|---|
| Pottuvil | 514 | 37,230.00 | 04 | 12,000.00 |
| Thirukkovil | 475 | 32,480.00 | 12 | 36,000.00 |
| Karaithivu | 214 | 14,990.00 | 10 | 27,000.00 |
| Kalmunai | 125 | 8,500.00 | 14 | 42,000.00 |
| Sammanthurai | 390 | 26,995.00 | 06 | 17,000.00 |
| Navithanveli | 330 | 27,180.00 | 07 | 21,000.00 |
| **Total** | **1,925** | **147,375.00** | **57** | **155,000.00** |

## சிறுவர் அபிவிருத்தி திட்டம்.

### 01.பாலர் பாடசாலை நடாத்தல்.

சிறுவர் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான திருக்கோவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களில் 15 பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இப் பாலர் பாடசாலைகளில் 29 ஆசிரியர்கள் கற்பித்து வருவதுடன் 415 சிறார்கள் கல்விகற்றும் வருகின்றனர்.

ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமையினை மேம்படுத்தும் நோக்கில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு வருவதுடன், இக்கலந்துரையாடலின்போது ஆசிரியர்களினால் எதிர் நோக்கப்படுகின்ற பிரச்சினைகள் குறித்தும், தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

**02.மாணவர்களுக்கான கலை நிகழ்வுகள், விளையாட்டுப்போட்டிகள், சிறுவர்தின நிகழ்வுகளை நடாத்தல்.**

கல்வி கற்றுவரும் சிறார்களின் திறன், ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் நோக்கில் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான கலை நிகழ்வுகளும், விளையாட்டுப்போட்டிகளும் பிரதேச மட்டத்தில் சகல பாடசாலை மாணவர்களையும் ஒருங்கிணைத்து நடாத்தப்பட்டு வருகின்றன.

அவ்வகையில் திருக்கோவில் பிரதேசத்தில் செயற்பட்டு வருகின்ற சுவாட் அமைப்பின் 7 முன் பாலர் பாடசாலை மாணவர்களையும் ஒருங்கிணைந்த விளையாட்டுபோட்டி நிகழ்வானது 27.03.2019ம் திகதி தம்பட்டை லெவன் ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் பி.ப 3.00 மணிக்கு திருக்கோவில் பிரதேச முகாமையாளர் செல்வி.இ.சாம்பவிலோஜினி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் அதிதிகளாக சுவாட் தலைமையலுவலகம் சார்பில் தலைவர் திரு.வ.பரமசிங்கம் அவர்களும், பாலர் பாடசாலை பொறுப்பாளர் திரு.S.லோகிதன் அவர்களும், திருக்கோவில் பிரதேச தலைவி திருமதி.அ.தேவராணி மற்றும், கிராம சேவை உத்தியோகத்தர், கிழக்கு மாகாண முன்பள்ளி கல்விப்பணியக கள உத்தியோகத்தர் திரு.பா.மோகனதாஸ், திருக்கோவில் வலயக்கல்வி அலுவலக முன்பள்ளி இணைப்பாளர் திரு.எஸ்.விவேகானந்தராசா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.






## சமூக அபிவிருத்தி செயற்திட்டம்.

**01. கிராம மட்ட சுயசார்புக் குழுக்களை அமைத்து இக்குழுக்களுடனான மாதாந்த கலந்துரையாடல்களை நடாத்தல்.**

சமூகப் பொருளாதார நிலையில் நலிவுற்று பாதிக்கப்பட்ட மக்களை குழுக்களாக ஒன்றிணைத்து அவர்களுக்குத் தேவையாக வழிகாட்டல், ஆலோசனைகள், உதவிகளை வழங்கி, அவர்கள் தமது சுய நடவடிக்கைகளின் ஊடாக நீடித்து நிலைத்திருக்கத் தக்கதும், கௌரவமானதுமான தன்னிறைவான வாழ்க்கையை வாழும் நிலையினை உருவாக்கும் நோக்கில் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான 6 பிரதேசங்களிலுமுள்ள 53 கிராமக் கிளைகளில் 288 சுய சார்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு இக்குழுக்களின் ஊடாக கிராம அபிவிருத்தி செயற்திட்டங்களானது சுவாட் மைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் இக் குழுக்களுடனான மாதாந்த குழுக்கலந்துரையாடலானது இவ்வருடம் 2507 நடாத்தப்பட்டுள்ளதுடன் இதில் 24,806 அங்கத்தவர்கள் கலந்துகொண்டு குழு முன்னேற்றத்திற்கும், கிராம முன்னேற்றத்திற்குமான குழுச் செயற்பாடுகளில் பங்கேற்றுள்ளனர்.





குழுச் செயற்பாடுகளாக வருமானம் தரும் உள்ளூர் உற்பத்திகளை குழுவாக இணைந்து மேற்கொள்ளல், சிரமதான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். பயிர் விதைகள், பழமரக் கன்றுகளை வழங்குதல், வறிய மாணவர்களுக்கு உதவுதல், இயலாமைக்கு உட்பட்டவர்களுக்கு உதவுதல், வைத்தியசாலைகளுக்கு வில்லை பை தயாரித்து வழங்குதல், பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு தயாரித்து வழங்கல், அங்கத்தவர்களின் கிணறுகளுக்கு குளோரின் இடல் போன்ற சமூக அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**02. கிளை , பிரதேச ரீதியாக நிருவாகங்களை அமைத்து மாதாந்த கலந்துரையாடல்கள் மூலம் கிராம மட்ட தேவை, பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

அங்கத்தவரது குடும்ப முன்னேற்றத்திற்கும், கிராம, சமூக,பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிகாட்டும் வகையில் மாதம் ஒரு தடவை 53 கிளைகளிலும் கிளை நிர்வாகிகளுடனான கலந்துரையாடல்களும், 6 பிரதேசங்களிலும் பிரதேச நிர்வாகிகளுடனான கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டு கிளை, பிரதேச ரீதியான செயல் முன்னேற்றங்கள் குறித்தும், சவால்கள், பொதுத் தேவை, பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டு அவற்றுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் இவ்வருடம் 23,106 அங்கத்தவர்கள் பங்குபற்றுதலுடன் 3,335 கிளைக்கூட்டங்களும், 2,408 பிரதேச நிர்வாகிகளின் பங்கு பற்றுதலுடன் 72 பிரதேச நிர்வாகக் கூட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.





**03. துறைசார் நிபுணத்துவர்களைக் கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளல்.**

கிராம மட்டத்தில் துரைசார் நிபுணர்களை அழைத்து அவர்களினால் வழங்கப்படும் சேவைகள் குறித்தும், அவற்றை பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் குறித்தும் விப்புணர்வு கருத்தரங்குகள் சுவாட் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனூடாக கிராம மட்டங்களில் அடையாளம் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு இலகுவில் துறைசார் உத்தியோகத்தர்களை அணுகி தீர்வுகாண்பதற்கும், அவர்களுடனான சிறந்த தொடர்பை ஏற்படுத்திகொள்ளக்கூடியதற்குமான வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அமைப்பின் செயற்பாட்டு பிரதேசங்களான 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இவ்வருடம் 36 விழிப்புணர்வு கருந்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் இதில் 1328 பேர் கலந்துகொண்டு துறைசார் ரீதியான விழிப்புணர்வைப் பெற்றுள்ளனர்.

## "புதிய தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல்" தொடர்பான வழிப்புணர்வு.

20.06.2019ம் திகதி கல்முனைப் பிரதேசத்தில் புதிய தொழில் முயற்சிகளை உருவாக்குதலும், ஊக்கமளித்தலும் தொடர்பாக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.ராகினி, விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் திருமதி.ச.ஜெயந்தன் அவர்களைக்கொண்டு 45 பேருக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.



## "அரச உதவிகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது தொடர்பான விழிப்புணர்வு"

17,19.06.2019ம் திகதிகளில் காரைதீவு பிரதேசத்தில் அரச உதவிகளை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது தொடர்பாக SSO Mr.K.குணரெட்ணம் அவர்களைக் கொண்டு 125 பேருக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.



## "போதைப்பொருள் ஒழிப்பு" தொடர்பான விழிப்புணர்வு.

25.06.2019ம் திகதி சம்மாந்துறை பிரதேசத்தில் புகைத்தல் மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக சமூக சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் Mrs.ஜெகநாதன் , RDO Mrs.ரசிட் முகமட் அவர்களைக் கொண்டு 47 பேருக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.



## பிள்ளைகளின் உயர்கல்வி, தொழில் பயிற்சி தொடர்பான விழிப்புணர்வு.

28.05.2019ம் திகதி கல்முனைப் பிரதேசத்தில் பிள்ளைகளின் உயர் கல்வி தொடர்பாகவும், தொழிற்பயிற்சிகள் தொடர்பாகவும். திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.பஸ்லீன் அவர்களைக் கொண்டு 35பேருக்கு வழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.



## “பிள்ளை பராமரிப்பு தொடர்பிலான உளநல ஆலோசனை” குறித்த வழிப்புணர்வு.

பிள்ளை பராமரிப்பின்போது பெற்றோர்களின் கோபம், மற்றும் செயற்பாடுகள் காரணமாக பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய உளநலப் பாதிப்புக்கள் குறித்து உளநல ஆலோசகர் திருமதிA.R.பௌமியா அவர்களைக்கொண்டு 22.07.2019ம் திகதி கல்முனைப் பிரதேசத்தில் பெரியநீலாவணை கிளையில் 25 பேருக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.



## “ சுயதொழில் முயற்சியாளர்களுக்கான வியாபாரத் திட்டமிடல்” தொடர்பான விழிப்புணர்வு.

10,07.2019ம் திகதி பொத்துவில் பிரதேச குண்டுமடு கிளையில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி- ஜீவதர்சினி கருணாகரன் அவர்களைக் கொண்டு சுயதொழில் முயற்சியாளர்கள் 31 பேருக்கு வியாபாரத்திட்டமிடல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.



## “சிறுவர் பாதுகாப்பு” தொடர்பான விழிப்புணர்வு.

28,07.2019ம் திகதி காரைதீவு பிரதேசத்தில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக கலாச்சார உத்தியோகத்தர் திருமதி.ச.சிவலோஜினி அவர்களைக் கொண்டு ஆதிசிவன் அறநெறி பாடசாலை மாணவர்கள் 35 பேருக்கும், விஸ்ணு அறநெறி பாடசாலை மாணவர்கள் 45 பேருக்கும் விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.



## “பிள்ளைகளின் மகிழ்ச்சி கரமான வாழ்விற்கு பெற்றோர்களின் பங்களிப்பு” தொடர்பான விழிப்புணர்வு.

25.07.2019ம் திகதி சம்மாந்துறைப் பிரதேச மல்வத்தை-01 கிளையில் 49 பேருக்கு பிள்ளைகளின் மகிழ்ச்சி கரமான வாழ்விற்கு பெற்றோர்களின் உளநல ரீதியான பங்களிப்பு குறித்து உளநல உத்தியோகத்தர் Mrs.A.Sutharsan, CRPA- Miss.M.I.Paththima Harima, DCPO- Miss.M.I.Pasina ஆகியோரைக் கொண்டு விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.

## “தலைமைத்துவத்தை மேம்படுத்தல்” தொடர்பான வழிப்புணர்வு.

27.06.2019ம் திகதி கல்முனைப்பிரதேசத்தில் தலைமைத்துவத்தை மேம்படுத்துவது தொடர்பாக WDO - சு.டெலீனா அவர்களைக் கொண்டு 30 பேருக்கு விழிப்புணர்வு நடாத்தப்பட்டுள்ளது.

## “ மாணவர்களின் திறனை விருத்தி செய்வதில் பெற்றோரின் பங்களிப்பு” தொடர்பான விழிப்புணர்வு.

26,08.2019ம் திகதி கல்முனை பிரதேசத்தில் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.A.M.பஸ்லீன் அவர்களைக் கொண்டு 35 பேருக்கு மாணவர்களின் திறனை விருத்தி செய்வதில் பெற்றோரின் பங்களிப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது.



## “சிறுவர் உரிமைகளை பாதுகாத்தல், துஸ்பிரயோகத்தினை தடுத்தல்” தொடர்பான வழிப்புணர்வு.

சிறுவர் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் சிறுவர் துஸ்பிரயோகத்தினை தடுத்தல் தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ்.திவ்வியா மற்றும் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏன்.ஏ.எம்.பைசர் ஆகியோரைக்கொண்டு 22.08.2019ம் திகதி பொத்துவில் பிரதேச கோமாரி 02 கிளையில் 25 பேருக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.

## “பயிர்ச்செய்கையின்போது விளைச்சலினை அதிகரிக்கும் முறை” குறித்த வழிப்புணர்வு.

11,07.2019ம் திகதி பொத்துவில் பிரதேச கோமாரி 02 கிளையில் விவசாய போதனாசிரியர்.திரு.கே.குணசீலன் அவர்களைக் கொண்டு பயிர்ச்செய்கையின்போது விளைச்சலினை அதிகரிக்கும் முறைமைகள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. இதில் 31பேர் கலந்துகொண்டனர்.

## “வங்கி நடைமுறை தொடர்பான வழிப்புணர்வு’’

17,20,24.08.2019 ஆகிய திகதிகளில் காரைதீவு பிரதேசத்தில் HNB வங்கி ஊழியர் திருமதி.யாழினி அவர்களைக் கொண்டு வங்கி நடைமுறைகள், வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக 3 விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. இதில் 123பேர் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளனர்.



## “ போதைப்பொருள் பாவனையும் அதனால் ஏற்படக்கூடிய தீமைகளும்” தொடர்பான விழிப்புணர்வு.

20,08.2019ம் திகதி பொத்துவில் பிரதேசத்தில் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.M.M.சுக்கூர் அவர்களைக் கொண்டு போதைப்பொருள் பாவனையும் அதனால் ஏற்படக்கூடிய தீமைகளும் தொடர்பாக 33 பேருக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது..



## " கற்றாழை தொடர்பான பெறுமதிசேர் உற்பத்திகளை ஊக்குவித்தல்" தொடர்பான விழிப்புணர்வு.

19.09.2019ம் திகதி காரைதீவு பிரதேசத்தில் கற்றாழை தொடர்பான பெறுமதிசேர் உற்பத்திகளை ஊக்குவித்தல் தொடர்பாக அப்ரெட்அரோசியன் கம்பனி இணைப்பாளர் திரு.ஏ.கவிபிரதாப் அவர்களைக் கொண்டு விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது. இதில் 50பேர் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர்.



## தொண்டர்களைக் கொண்டு கிராம மட்ட பொதுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

கிராம மட்டங்களில் அபிவிருத்திச் செயற்பாட்டை இளைஞர்களுக்கூடாக கட்டியெழுப்பும் நோக்கில் கிராம, பிரதேச ரீதியாக அடையாளம் காணப்பட்ட தேவை, பிரச்சினைகளை அக்கிராமங்களிலுள்ள தொண்டர்களைக் கொண்டு சமூகப்பங்களிப்புடன் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், கள உத்தியோகத்தர்களின் கள மட்ட செயற்பாடுகளில் தமது பங்களிப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றனர். அந்தவகையில் இம் மூன்று மாத காலப்பகுதியில் கிராம ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 271 தொண்டர்களைக் கொண்டு 57 சமூக அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## "விளைச்சல் தரும் தரமான பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளல்" தொடர்பான வழிப்புணர்வு.

30.09.2019ம் திகதி நாவிதன்வெளிப் பிரதேசத்தில் விளைச்சல் தரும் தரமான பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளல் தொடர்பாக விவசாய திணைக்கள அதிகாரி ஏம்.எச்.ஜெயலா இப்தீன் அவர்களைக் கொண்டு விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது. இதில் 35பேர் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளனர்.

## "நஞ்சற்றமுறையிலான வீட்டுத் தோட்டமும், நாற்று முறைகளும்" தொடர்பான விழிப்புணர்வு.

19.09.2019ம் திகதி பொத்துவில் பிரதேசத்தில் விவசாய போதானாசிரியர் திரு.சுந்தரமூர்த்தி, எஸ்.எம்.சிதாரா ஆகியோரைக் கொண்டு நஞ்சற்ற முறையிலான வீட்டுத் தோட்டமும், நாற்று முறைமைகளும் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது. இதில் 48பேர் கலந்துகொண்டு பயன் பெற்றுள்ளனர்.

## " தொழில் கல்வியின் முக்கியத்துவம்" தொடர்பான விழிப்புணர்வு.

14,17.09.2019 ஆகிய திகதிகளில் காரைதீவு பிரதேசத்தில் தொழில் வழிகாட்டல் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.S.சிவநேசன் அவர்களைக் கொண்டு தொழில் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக 2 விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. இதில் 77 பேர் கலந்து கொண்டுள்ளனர்.

### 04. தொண்டர்களைக்கொண்டு கிராம மட்ட பொதுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

கிராம மட்டங்களில் அபிவிருத்திச் செயற்பாட்டை இளைஞர்களுக்கூடாக கட்டியெழுப்பும் நோக்கில் கிராம, பிரதேச ரீதியாக அடையாளம் காணப்பட்ட தேவை, பிரச்சினைகளை அக்கிராமங்களிலுள்ள தொண்டர்களைக் கொண்டு சமூகப்பங்களிப்புடன் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், கள உத்தியோகத்தர்களின் கள மட்ட செயற்பாடுகளில் தமது பங்களிப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றனர். அந்தவகையில் இவ்வாண்டு கிராம ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 930 தொண்டர்களைக் கொண்டு 187 சமூக அபிவிருத்தி செயற்பாடுகள் கிராம மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- காரைதீவு கிளை 05 இல் பிரதேச சபை தவிசாளருடன் கலந்துரையாடி முருகன் கோவில் வீதி, வடிவேல் வீதி, தேசிகர் வீதி, ஆலையடி வீதி போன்ற வீதிகளுக்கு 10 மின் விளக்குகளை போடப்பட்டுள்ளன.

- காரைதீவு பிரதேசத்தில் மிகவும் வரிய 30 குடும்பங்களை தொண்டர்கள் ஊடாக அடையாளம் கண்டு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு கோழிக்குஞ்சுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

- நாவிதன்வெளிப் பிரதேசத்தில் போசாக்குக் குறைந்த பிள்ளைகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு வேல்விசன் நிறுவனத்தின் ஊடாக அப்பிள்ளைகளின் பெற்றோருக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு போசாக்கினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நாவிதன்வெளிப் பிரதேசத்தில் நீர்த் தட்டுப்பாடு காரணமாக பிரதேச சபையுடன் கலந்துரையாடி குடிநீர் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதுடன், 20 பேர் இணைந்து பாழடைந்த பொதுக்கிணறு ஒன்றினை சுத்தம் செய்து வழங்கியதனூடாக அக்கிராம மக்கள் வீட்டுப் பாவணைக்காக அந்நீரை பயன்படுத்தி வருகின்றனர்.

- மகளிர் சங்கத்தின் ஊடாக பொத்துவில் பிரதேசத்தில் தொழில் முதன்மையாளர்கள் சங்கம் 3 தெரிவு செய்து வெரண்டினா நிறுவனத்தோடு தொடர்புகளை பெற்று அவர்களுக்கு தேவையான பயிற்சிகளை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

- மல்வத்தை 01 இல் உள்ள நபர் ஒருவர் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளை வைத்து மண் ஏற்றும் வேலைகளை செய்து வருகின்றார். எனவே சிவில் பாதுகாப்பு குழு ஊடாக இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நாவிதன்வெளி 13கொலனி குழாய் நீர் மெயின் வீதியால் மாத்திரம் போகின்றது ஏனைய உள்வீதிகளில் குழாய் பொருத்தப்படவில்லை. இதனால் தற்போது நீர் பிரச்சனையாக உள்ளது. இவ்விடயம் தொடர்பாக பிரதேச செயலகத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

- காரைதீவு 05 தேசிகர் முதலாம் குறுக்கு வீதி புனரமைக்கப்படல் வேண்டும். வீதி புனரமைப்பு தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர்களுடன் தொடர்புகொண்டு வீதி புனரமைப்புச்செய்வதற்கான ஏற்பாடுகள் இக்கிளை நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

## தொழில் திறன் அபிவிருத்தி திட்டம். (Vocational Skill Development)

தேசிய மற்றும் மாவட்ட கட்டமைப்புக்களை வலுப்படுத்தி தொழில் வழிகாட்டல், ஆற்றுப்படுத்தல்கள் ஊடாக புலம்பெயர் தொழிலாளர்கள் தரமான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு பங்களிப்புச் செய்யும் பொருட்டு SLMP செயற்திட்டத்தின் கீழ் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ள தொழில் திறன் அபிவிருத்தி செயற்திட்டமானது பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, கல்முனை, நாவிதன்வெளி, சம்மாந்துறை, இறக்காமம் ஆகிய 11 பிரதேச செயலாளர் பிரிவுகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

### Orientation to relevant Government Stakeholders at DS level

தெரிவு செய்யப்பட்ட 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமிருந்து இத்திட்டத்துடன் தொடர்புடைய 275 அரச அதிகாரிகளை உள்ளிணைத்து 11 திட்டவிளக்கக் கலந்துரையாடலானது நடாத்தப்பட்டுள்ளது.






### Sensitizing on VSD process, and concept to Village level government officer and CBOs leaders, volunteers

தொழில் திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயல்முறைகள் குறித்து உணர்வூட்டல் கலந்துரையாடலானது (Sensitizing) கிராமிய மட்ட அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் கிராம மட்ட அரச அதிகாரிகள் 551 பேரை உள்ளிணைத்து 17 கலந்துரையாடல்களும், தொண்டர்கள் 90 பேரை உள்ளிணைத்து 3 கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டுள்ளன.





## Training Counselors and other staff with relevant information (NITA, NYC, VTA, DTET)

இத்திட்டச் செயற்பாடுகள் குறித்து அரச தொழில் பயிற்சி ஆலோசகர்கள், மற்றும் தொடர்புடைய பங்குதாரர்கள், திட்ட பணியாளர்களுடனான 4 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு இதில் அவர்களது பங்கேற்புடனான செயற்பாடுகள் குறித்த தகவல் வழங்கப்பட்டு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன், இத்திட்டச்செயற்பாட்டில் அவர்களது பங்களிப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.






## Pre Counseling interview

தொழில்திறன்களைப் பெற்று வெளிநாடு செல்ல எதிர்பார்த்திருக்கும் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்து மீளத்திரும்பிய தொழிலாளர்களுக்கு தொழில் திறன்கள் தொடர்பான வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கும் நோக்குடன் தொழில்திறன் அபிவிருத்தி செயல்திட்டத்தின் கீழ் தொழில்துறை பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளில் பொருத்தமான பயனாளிகளை தெரிவு செய்வதற்கான Pre Counseling ஆனது 395 பேருக்கு மேற்கொள்ளப்பட்டு இதில் 255 பேர் பொருத்தமான பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் தற்போது 138 பேர் பயிற்சிக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். (59 பேர் vocational training, 32 பேர் RPL-NVQ, 43 பேர் Group Training, 4 பேர் EBT)





## பாதுகாப்பான புலம்பெயர் தொழிலாளர் நிகழ்ச்சித்திட்டம்.

Swiss Development Cooperation -SDC நிறுவனத்தின் நிதி உதவியுடன் சுவாட் அமைப்பினால் செயற்படுத்தப்பட்டு வருகின்ற தொழிலாளர்கள் பாதுகாப்பாக புலம் பெயர்வதற்கான வழிகாட்டல் (Safe labor migration) திட்டமானது அம்பாரை மாவட்டத்தில் உள்ள பொத்துவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, இறக்காமம், உகண ஆகிய 10 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 149 கிராமங்களில் தொழில் நிமிர்த்தம் வெளிநாடு சென்றுள்ள மற்றும் மீண்டும் நாடு திரும்பிய 57979 குடும்பங்களுடன் (**Direct Beneficiaries** - 8975, **Indirect Beneficiaries**- 49004) இவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இத்திட்டத்தின் ஊடாக கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 01. புலம்பெயர் தொழிலாளர் சங்கங்களுக்கான கொள்திறன் மேம்பாட்டு பயிற்சி நடாத்தல்.

கிராம மட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் நலன்புரி, உரிமைகள் சார்ந்த விடயங்கள் தொடர்பாக மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் குரல் கொடுக்கும் நோக்கில் இத்திட்ட செயற்பாட்டுப்பிரதேசத்திலுள்ள 9 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 30 புலம்பெயர் தொழிலாளர் நலன்புரி சங்கங்கள் இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன. இச்சங்கத்தின் கொள்தகுதிறனை விருத்திசெய்து சக்திப்படுத்தி வலுவூட்டுவதன் ஊடாக வினைத்திறனான சேவைகளை புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கில் SDC நிறுவனத்தின் ஆலோசகர் திருமதி.மொனிக்கா அவர்களைக்கொண்டு இச்சங்க தலைவர்கள், நிர்வாகிகள், பணியாளர்களை உள்ளிணைத்த வகையில் மாவட்ட அளவில் 3 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சியில் 66பேர் கலந்துகொண்டுள்ளனர்.





புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு இச்சக்கத்தின் ஊடாக தீர்வுகாண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்லல் தொடர்பான தகவல்களை வழங்குதல், பாதிக்கப்பட்டோருக்கான சட்ட உதவியளித்தல், உளவள ஆலோசனை வழங்கல், மற்றும் அனுப்பப்படும் நிதியை முகாமைத்துவம் செய்வதற்கு குடும்பத்துடன் மீள இணைந்துகொள்வதற்குமான வழிகாட்டுதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்வதற்கும் 30 சங்கங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் 350 பேரை உள்ளினைத்து 16 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.





**02.தொண்டர்களுக்கான பயிற்சி வழங்கல்.**

பாதுகாப்பான தொழிலாளர் புலம்பெயர்வு தகவல்கள் குறித்த விழிப்புணர்வை கிராம மக்களுக்கு வழங்கும் நோக்கில் இத்திட்டச் செயற்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 105 தொண்டர்களுக்கு அவர்களுக்குத் தேவையான 4நாள் கொண்ட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.





02. அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான மீளாய்வுக் கலந்துரையாடல்களை நடாத்தல்.

இத்திட்டத்தின் ஊடாக திட்ட செயற்பாட்டு பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள புலம்பெயர் தொழிலாளர் நலன்புரிச்சங்கங்களின் நோக்கம் குறித்தும், இச்சங்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற செயற்பாடுகளை தெளிவுபடுத்தி எதிர்வரும் காலங்களில் இச் சங்கங்களுடன் இணைந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எவ்வாறு செயலாற்றுவது சேவையினை வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்துவது, இதிலுள்ள சாதக, பாதகங்கள் குறித்தும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் 3 மீளாய்வுக் கலந்துரையாடல்கள் DOFE Coordinator A.M.Farzan அவர்களின் ஒழுங்குபடுத்தலின் கீழ் நடாத்தப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடல்களில் 120 DO-FE கலந்துகொண்டுள்ளனர்.





03. துறைசார் அரச அதிகாரிகளுடனான மாவட்ட மட்ட மீளாய்வுக் கலந்துரையாடல்களை நடாத்தல்.

**04. புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கான சட்ட உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.**

கிராம, பிரதேச மட்டங்களில் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற சட்ட பிரச்சினைகள், சவால்களுக்கான ஆலோசனை, வழிகாட்டல்களை மேற்கொண்டு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இத்திட்டப் பிரதேசங்களிலிருந்து சட்ட உதவியாளராக தெரிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்பு உறுப்பினர்கள் 111 பேருக்கு இவ்வருடம் சட்ட உதவி தொடர்பிலான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடாக புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்கொண்ட 42 முறைப்பாடுகள் இவ்வருடம் கிடைக்கப்பெற்று அவற்றில் 80 வீதமான முறைப்பாடுகளுக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. இதில் 8 பேருக்கு 1,318,500.00 ரூபாய் நிதியானது இழப்பீட்டிற்கான நஸ்டஈடாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

**05.**